குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 32/2020

அ.சா. 2

2023–ம் ஆண்டு நவம்பர் 21–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 2 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | அண்ணாமலை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 4.15 மணி,

Accused Murugan Present. Advocate Mr.Arunachalam present for accused. APP is Mr.M.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பூசாரிபட்டியில் இந்திரா நகரில் குடியிருந்து கொண்டு டைலர் கடையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த மாதம்மாள் எனது தாயார். கடந்த 13.03.2019 ம் தேதி விடியற்காலை 5 – 6 மணிக்குள்ளாரா சேலம் டூ தர்மபுரி செல்லும் சாலையில் பூசாரிப்பட்டி இந்திரா நகர் அருகே சாலையின் ஓரமாக எனது அம்மா மாதம்மாள் நின்று கொண்டிருந்தார்.

2. அப்போது சேலம் பக்கம் இருந்து தர்மபுரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் எனது அம்மாவின் மீது மோதிவிட்டது. எனது அம்மாவிற்கு காது, வயறு, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் அவரை தனியார் ஆம்புலன்ஸ மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். அங்கு எனது அம்மா சுமார் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று 3.04.2019 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

3. விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 30 71 என்று என்பது மட்டும் தான் எனக்கு நினைவுள்ளது. ஆஜர் எதிரியை விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை சம்பத்தின் போது ஓட்டி வந்தார். ஆஜர் எதிரி ஓட்டி வந்த

வாகனம் ஆக்டிவா வாகனம். போலீஸார் என்னை விசார்த்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**4.** விபத்து குறித்து எனது வீட்டிற்கு அருகில் உள்ள நபர் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். அவரது பெயர் எனக்கு நினைவில்லை. எனக்கு தகவல் கிடைத்து 2 நிமிடத்தில் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் சம்பவ இடம் சென்ற போது எனது அப்பா சம்பவ இடத்தில் இல்லை. நான் மட்டும் தான் மருத்துவமனைக்கு எனது அம்மாவை அழைத்துச் சென்றேன்.

5. மருத்துவமனையில் நாங்கள் இருந்த போது சுமார் 9-10 மணிக்குள் போலீஸார் வந்தார்கள். எதிரியின் பெயர் மற்றும் விபரம் அருகில் இருந்தவர்கள் கூறினார்கள் யார் கூறினார்கள் என்று தற்போது நினைவில்லை. சம்பவதன்றே போலீஸார் என்னை விசாரித்தார்கள். மருத்துவமனையில் வைத்து தான் என்னை போலீஸார் விசாரித்தார்கள். அதன் பின்பு என்னை போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

6. எனது அம்மாவிற்கு எந்த இடங்களில் அடிப்பட்டது என்று போலீஸார் என்னிடம் கேட்டார்கள். ஆம்புலன்ஸில் எனது அம்மா அழைத்துக் கொண்டு நான் மட்டும் தான் சென்றேன். எனது அப்பா என்னுடன் வரவில்லை. சம்பவ இடத்தை நானும் எனது அப்பாவும் பார்த்தோம் என்று போலீஸார் விசாரணையில் சொன்னோம்.

7. சம்பவ இடத்தில் இருந்த எதிரியின் வாகனத்தை யார் எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியுமாக என்றால் எனது அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற பின்பு சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. தற்போது நான் கூறியுள்ள சங்கதிகள் போலீஸார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எதிரிக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நானும் என் அப்பாவும் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 4.33 .மணி,

ஒம்/-ச.ஷர்மிளா,.

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்